முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல் பாகம்–2**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**08.07.2021**, வியாழக்கிழமை

1. ஆறுமுகனார் அகத்தியர் சக்தியாக
அறமாக வரமாக இணைந்து
மாறுதலை கலியில் செய்யவே
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் அவதாரம் மெச்சி
அத்திரி மகரிஷியும் துல்லிய ஆசி
வரங்களாக பிலவமிதுன திங்கள்
வல்லமைபட அறுநான்குதிகதி குருவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 24ம் நாள், 08.07.2021 வியாழக்கிழமை)
3. வாரமதில் ஞானவழிகள் சிறக்க
வழங்குவேன் உலகோரை நோக்கி
ஆறுமுக அரங்க மகானின்
அற்புதமான ஞான உபதேசங்களை
4. உபதேசங்களை ஏற்றுத் தொடரும்
உலகமக்களுக்கு நல்ல தேற்றமும்
அபயமென அரங்கனை நாடி
அன்னதான சேவை ஆற்றிவரும்
5. ஆற்றிவரும் உலக மக்களுக்கு
ஆறுமுகனார் ஆசி அருளும்
மாற்றம் தரும்படி கண்டுசிறக்கும்
மரணம் வெல்லும் மகாசூட்சுமம்
6. சூட்சுமம் தரும் மகாதவசியின்
சுப்பிரமண்யர் ஞானம் பயின்றுவர
மாட்சிமைபட உலகம் எங்கிலும்
மாற்றம் பாதுகாப்பாக உருவாகும்
7. ஆகவே அரங்க மகானின்
அறம் தரும வழிகளுக்கு
மிகையான பலம் கூட்டியே
மகான் அத்திரியும் துணைவருவேன்
8. வருகவே பிரணவக் குடிலை
வலம் வரும் மக்களுக்கு
தருவேன் எல்லா வகையும்
தக்க ஆசியும் அருளும்பொருளும்
9. அருள்பொருள் வளமும் ஈந்து
அவரவர் வாழ்விலும் மாற்றம்
அருட்சுடராக அருளி காப்பேன்
ஆபத்தை பேரிடரை விரட்டி

10. விரட்டி அரங்கனுள் சக்தியாக
வேலவன் வழி நடத்திவர
தரணியில் ஞான சக்திநிரம்பி
தனித்துவமும் ஞான ஆட்சிகாலமும்

11. காலமும் தானாக கனியும்
கருணைமிக்க அரங்கன் சேவையாலே
ஞாலமதில் கலியுகம் தானும்
ஞானயுகமாக மாற்றம் தரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–